வேலூர் மாவட்டம் காட்பாடி ஊராட்சி ஒன்றியம் சேர்க்காட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ரூ.12.46 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி தலைமையில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி முன்னிலையில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் வே.இரா.சுப்பு லட்சுமி, மாவட்ட கழக செயலாளர் ஏ.பி நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசுகி, மாநகர செயலாளர் கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமுலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில் குமார், ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன், துணைத் தலைவர் சரவணன், மண்டல குழு தலைவர் புஷ்பலதா கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கடந்த 10 ஆண்டுகாலம் கவலைப்படாமல் இருந்துவிட்டு – தற்போது

காலி மது பாட்டில்களைத் திரும்பப் பெறுவது பற்றி எடப்பாடி பழனிசாமி அறிக்கை விடுவது நியாயமா?

அமைச்சர் சு.முத்துசாமி கண்டன அறிக்கை!

சென்னை, ஜூலை 26- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி அவர்களின் அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி டாஸ்மாக் கடைகளில் காலி பாட்டில்களை திரும்பப் பெறுவது சம்பந்தமாக (23.07.2024 அன்று) ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஆணைப்படி டாஸ்மாக் நிறுவனத்தால் காலி புட்டிகளை திரும்பப் பெறும் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் கடந்த 15.05.2022 முதல் அமல்படுத்தப்பட்டது. மற்ற மலை சார்ந்த பகுதிகளில் 15.06.2022 முதல் அமல்படுத்தப்பட்டது. தொடர்ந்து இதர மாவட்டங்களுக்கு விரிவாக்கம் செய்து இதுவரை மொத்தமாக 9 மாவட்டங்களில் முழுமையாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் இத்திட்டத்தினை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் விரிவுபடுத்தும் பொருட்டு மண்டலங்கள் வாரியாக ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டிருந்தது. இந்நிலையில் இது தொடர்பான வழக்கில் காலி புட்டிகள் மூன்றாம் நபரிடம் செல்லாமல் இருப்பதற்காகவும், காலி புட்டிகள் உடைக்கப்படாமல் மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கே சென்றடைய வேண்டுமென்ற நோக்கத்துடனும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் காலி புட்டிகளை மதுபான உற்பத்தி நிறுவனங்களே திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டி அறிவுறுத்தியது. அதனடிப்படையில் ஏற்கனவே கோரப்பட்டிருந்த ஒப்பந்தப்புள்ளிகள் ரத்து செய்யப்பட்டது. மேலும், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தும் நடவடிக்கையாக மதுபான உற்பத்தி நிறுவனங்களை அழைத்து காலி புட்டிகளை அவர்களே சேகரம் செய்ய வேண்டுமென்ற பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாகச் செயல்படுத்தப்படும்!

மதுபான உற்பத்தியாளர்களும் காலி புட்டிகளை திரும்பப் பெறுவது குறித்து இசைவு தெரிவிக்க சிறிது கால அவகாசம் கேட்டுள்ளனர்.

சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கும் பொருட்டு காலி புட்டிகளை திரும்பப் பெறும் திட்டம் மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் தான் அறிமுகப்படுத்தப்பட்டு வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.இத்திட்டத்தினை மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழிகாட்டுதலுடன் வருகிற அக்டோபர் மாதத்திற்குள் அனைத்து மாவட்டங்களிலும் முழுமையாக செயல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வயல்களிலும், சாலைகளிலும், பூங்காக்களிலும் காலி மதுபாட்டில்கள் வீசப்படுவதை தடுப்பதற்காகத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

10 ஆண்டுகால அவர்களின் ஆட்சியில் ஏன் திரு. பழனிச்சாமி இதை சிந்திக்கவில்லை. இப்பொழுது குற்றச்சாட்டுகள் சொல்லக்கூடியவர்கள் அந்த 10 ஆண்டு காலத்தில் இதை நடைமுறைபடுத்தியிருக்கலாமே. காலி பாட்டில்கள் வயல்களிலும் பொது இடங்களிலும் வீசப்பட்டதால் அந்த நேரத்தில் விவசாயிகளும் பொதுமக்களும் எவ்வளவு கடுமையாக பாதிக்கப்பட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றே. 10 ஆண்டு காலமாக அவர்களது ஆட்சிக் காலத்தில் அரசுக்கு வரவேண்டிய வருவாய் என்ன ஆனது என்று கேட்க வேண்டியுள்ளது.

காலி பாட்டில்களை திரும்பப் பெறுவதற்கான புதிய முயற்சிக்கான நடவடிக்கையை எடுக்கிறபொழுது மாண்பமை உயர்நீதிமன்றம் சில நல்ல அறிவுறுத்தல்களை தெரிவித்ததன் அடிப்படையில் அதை அமலாக்கவே ஏற்கனவே விடப்பட்ட டெண்டரை டாஸ்மாக் நிர்வாகம் ரத்து செய்துள்ளது என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மேலும், கடைகளில் கூடுதல் விலைக்கு விற்பதாக குற்றச்சாட்டு கூறியுள்ளார். கடந்த கால உங்கள் ஆட்சியில் இருந்து தொடர்ச்சியாக இருந்துவந்த அந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. ஒரு பணியாளர் அந்த தவறை செய்வதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்தபோது டேமேஜ் ஆகிற பாட்டில்களுக்கு போதிய நஷ்ட ஈடு கிடைப்பதில்லை; கூடுதல் கடை வாடகை மற்றும் பராமரிப்புக்கான செலவு செய்ய வேண்டியுள்ளது; மின்சார கட்டணம் கூடுதலாக கட்ட வேண்டியுள்ளது; இந்த செலவுகளை பணியாளர்களே ஏற்றுக்கொள்ளும் நிலை இருந்தது. தற்போது அவைகளை ஆய்வு செய்து மின்சாரத் திற்கு தனி மீட்டர் பொருத்தி, உரிய கட்டணத்தை செலுத்திட டாஸ்மாக் நிர்வாகத் தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாடகை முறையாக நிர்ணயிக்கப்பட்டு, துறை அந்த வாடகையை ஏற்றுக்கொள்ளும் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது. டேமேஜ் ஆகும் பாட்டில்களை சரியாக கணக்கிட்டு அச்செலவையும் நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பில்லிங் இயந்திரங்கள் பொருத்த நடவடிக்கை!

மாநிலத்தில் உள்ள அனைத்து மதுபான சில்லறை விற்பனைக் கடைகளில் வங்கிகள் மூலமாக மின்னணு கருவிகள் (Point of Sale Machines) நிறுவப்பட்டு மின்னணு பரிவர்த்தனைகள் மூலமாக பணம் செலுத்தும் வசதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் Billing Machine வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு விற்பனைக்கு ஏற்றார்போல் ஒரு மதுபான கடைக்கு இரண்டு முதல் நான்கு வரை பொருத்தும் பொருட்டு 12000 பில்லிங் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இரண்டு மாத காலத்திற்குள் அனைத்து டாஸ்மாக் மதுபான கடைகளிலும் பில்லிங் இயந்திரங்கள் பொறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பணியாளர்களின் பிரச்சினைகளை தீர்த்து பாதுகாக்க வேண்டியது அரசினுடைய கடமை என்கிற வகையிலே கலந்தாய்வின் மூலம் பணி மாற்றம் செய்து கொடுத்தது; மருத்துவ செலவுக்கான ஏற்பாடு செய்தது; பணியாளர்களை நேரடியாக அழைத்து அவர்களுக்கு இருக்கிற பிரச்சனைகளை தீர்க்க முயற்சித்தது போன்ற காரணங்களால் பணியாளர்கள் நம்பிக்கையோடு பணியாற்றுகிறார்கள் என்பது கவனிக்கத் தக்க ஒன்றாகும். மேலும் பணியாளர்களுக்கு தீபாவளி போனஸ் கடந்த ஆண்டு 20% வழங்கப்பட்டுள்ளது.

தொழிற்சங்கங்கள் முன் வைக்கும் மற்ற கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் அனைத்து சங்கங்களையும் ஒருங்கிணைத்து பேச்சுவார்த்தை நடத்தி அக்கோரிக்கைளுக்கு தீர்வு காணப்படும்.

சில இடங்களில் கூடுதலாக விற்கிறார்கள் என்ற செய்தி கிடைத்தவுடன் விசாரித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது பணியிடை நீக்கம் மற்றும் துறை ரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாஸ்மாக் கடைகளிலோ பார்களிலோ தவறு நடந்தால் தொடர்ச்சியாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சில இடங்களில் வெளியிலே விற்பனை செய்யக்கூடியவர்கள் மீது காவல்துறை வழக்கு பதிவு செய்து கைது உட்பட கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

மேலும் தமிழ்நாடு மது விலக்குச் சட்டம் 1937ல் திருத்தம் செய்யப்பட்டு அதில் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அபராதத் தொகையை அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை உயர்த்தியும், தண்டனைகளை கடுமையாக்கி அதிகபட்சமாக ஆயுள் தண்டனை வரை விதிக்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

தற்போது மதுக்கூடங்களுக்கு ஆன்லைன் மூலமாக டெண்டர் விடப்பட்டு வெளிப்படைத் தன்மையுடன் முடிவெடுக்கப்படுகிறது. உங்கள் ஆட்சிக் காலத்தில் ஆன்லைன் டெண்டர் முறை இருந்ததா?

காலி மதுபாட்டில்களை திரும்பப் பெறுவதை பற்றி 10 ஆண்டு காலம் கவலைப்படாமல் இருந்துவிட்டு தற்போது எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி இப்படிப்பட்ட ஒரு அறிக்கை விடுவது எந்த வகையில் ஏற்புடையது.

இவ்வாறு அமைச்சர் சு. முத்துசாமி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஈரோடு வடக்கு மாவட்ட கழக தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.பி.சண்முகசுந்தரம் மறைவினையொட்டி நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் தலைமையில் அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் முன்னிலையில் என்.ஆர்.நாகராஜ் வரவேற்பில் நடைபெற்றது. பொ.அன்பழகன்ஐ.ஏ.எஸ், (குலைவர்மற்றும்நிர்வாகஇயக்குனர், மகாராஷ்டிராமாநிலமின்வாரியம், மும்பை) நன்றிகூறினார். நிகழ்வில்துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., ஏ.ஜி.வெங்கடாசலம் எம்.எல்.ஏ., காயத்ரி சீனிவாசன், கள்ளிப்பட்டி மணி, சிந்து ரவிச்சந்திரன், வழக்கறிஞர் சென்னியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

சிவகங்கை மாவட்டத்தில் ரூபாய் 24.50 கோடியில்

மூன்று ஆண்டுகளில் அறநிலையத் துறையின் வளர்ச்சிப் பணிகள்!

அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேச்சு

சிவகங்கை, ஜூலை 26- சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் அருள்மிகு கொப்புடைய நாயகி அம்மன் கோயில் நிர்வாகத்தின்கீழ் உள்ள வாரச்சந்தைக் கான 90 புதிய கட்டிடங்கள் ரூபாய் ஒரு கோடியே 50 லட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொலி காட்சி மூலம்இந்த வாரசந்தை கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசியதாவது. முதல்வர் தளபதி அவர்கள் பதவி ஏற்ற 3 ஆண்டுகளில் அனைத்து துறைகளின் சார்பில் பல்வேறு வளர்ச்சி பணிகள் நடைபெற்று வருகின்றது. ஒன்றிய அரசு போல் முதல்வர் பாரபட்சம் பார்ப்பதில்லை. தமிழக முதல்வர் அவர்கள் அனைத்து மாவட்டங்களும் சீரான வளர்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் பல்வேறு திட்டங்களை செயல் படுத்தி வருகிறார். அந்த திட்டங்கள் முழு அளவில் நடைபெற்று அதன் பயன்கள் மக்களுக்கு போய் சேர வேண்டும் என்று விரும்புகிறார். சிவகங்கை மாவட்டத்தில் மூன்றாண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூபாய் 24.41 லட்சத்தில் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் 114 பணிகளில் 51 பணிகள் முழுமையாக முடிவடைந்து மக்கள் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மீதி உள்ள 63 பணிகள் நடைபெற்று வருகின்றது. விரைவில் அப்பணிகள். முடிவடையும். இதேபோல் அறநிலையத் துறை சார்பில் தமிழகம் முழுவதும் ஏராளமான கோவில் ஆக்கிரமிப்பு இடங்கள் மீட்கப்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கான கோவில்கள் குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. காரைக்குடி வளர்ந்து வரும் கல்வி நகரமாகும். தற்போது தமிழக முதல்வர் அவர்களால் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு வாரச் சந்தை ஒரு கோடியே 50 லட்சத்தில் புதிதாக கட்டப்பட்டுள்ளது. மேலும் பல புதிய கட்டடங்கள் இங்கு கட்ட வாய்ப்புள்ளது. இந்த வார சந்தை கட்டிடத்தில் அனைத்து வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். அதற்கான பணிகளை அறநிலையத் துறை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கான மாஸ்டர் பிளான் தயாரித்து அரசிற்கு அனுப்பிட வேண்டும். முதல்வர் தலைமையிலான அரசு பல்வேறு வளர்ச்சி பணிகளை நடத்தி வருகிறது என்பதற்கு இது ஒரு சான்றாகும். மக்களின் கோரிக்கைகளை இந்த அரசு ஏற்று அதனை முழுமையாக நிறைவேற்றி வருகிறது. இவ்வாறு அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பேசினார்.

முன்னதாக் அமைச்சர் கேஆர்.பெரிய கருப்பன் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் குத்துவிளக்கு ஏற்றினார்கள். நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமை வகித்தார் . இந்த நிகழ்ச்சியில் எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. காரைக்குடி நகர் மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் திருமதி புவனேஸ்வரி இளங்கோவன், ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள். முன்னதாக இந்து சமய அறநிலைத் துறை இணை ஆணையர் பழனி குமார் வரவேற்புப் பேசினார். நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், காரைக்குடி நகர்மன்ற துணைத் தலைவர் என். குணசேகரன், தேவகோட்டை கோட்டாட்சியர் எஸ்.பால்ராஜ், வட்டாட்சியர் ராஜா, மாவட்ட கவுன்சிலர் நாகனிசெந்தில்குமார், தேவகோட்டை நகர்கழக செயலாளர் பெரி. பாலா, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, நகர்மன்ற உறுப்பினர்கள் தனம் சிங்கமுத்து, மலர்வழி பழனி அப்பன், திவ்யா சக்தி, சொ. கண்ணன், ஒன்றிய ஒன்றிய செயலாளர் நா.நெடுஞ்செழியன், ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், சேவியர், ஒட்டுனர் ரமேஷ், சிதம்பரம் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர், காளிமுத்து, அயலக அணி சன்சீமான்சுப்பையா, வர்த்தக அணி ருக்மாசரவணன் உட்பட அதிகாரிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் மெய்யூரில் - 'மக்களுடன் முதல்வர்' சிறப்பு முகாம்!

மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜே.கோவிந்தராஜன் தொடங்கி வைத்தார்

திருவள்ளூர், ஜூலை 26- திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை தாலுகா பூண்டி ஒன்றியம் மெய்யூர், ராமதண்டலம், சித்தம்பாக்கம், எறையூர், மொன்னவேடு, தேவந்தவாக்கம், மாமண்டூர் ஆகிய ஊராட்சிகளுக்கான மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம் மெய்யூர் பகுதியில் நடைபெற்றது .

இதில் ஊத்துக்கோட்டை தாசில்தார் மதன் தலைமை தாங்கினார்.

இம் முகாமில் சிறப்பு அழைப்பாளராக திரு வள்ளூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும் கும்மி டிப் பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் கலந்து கொண்டு மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமை தொடங்கி வைத்து பொதுமக்கள் விவசாயிகள் இளைஞர்கள் வியாபாரிகள் பொதுநல சங்கத்தினர்கள் கோரிக்கைகளை கேட்டு அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் தொடர்ந்து பட்டா மற்றும் காப்பீடு அடையாள அட்டை , மருத்துவ உபகரணங்கள் ஆகியவை வழங்கினார்

இதில் பூண்டி ஒன்றிய செயலாளர் டி.கே.சந்திரசேகர், பூண்டி வடக்கு ஒன்றிய செயலாளர் ஜான் பொன்னுசாமி, ஒன்றிய குழு துணைத்தலைவர் மகாலட்சுமி மோதிலால் ,அவைத்தலைவர் சக்கரவர்த்தி, ஊராட்சி மன்ற தலைவர் லாவண்யா சரத்பாபு, ஒன்றிய கவுன்சிலர் தேன்மொழி ஏழுமலை, தில்லை குமார், பி.ஜோதீஸ்வரன், சீனிவாசன், விஜயன், ஜி. ரவிக்குமார், ராமாராவ். ஸ்ரீராமுலு, குப்பன், வெங்கடாதிரி, டார்த்தி, ஆர்.ரகு, பூபால உள்பட வருவாய் துறை, காவல் துறை, மின்சாரத்துறை, வீட்டு வசதி வாரியத்துறை, மாற்றுத்திறனாளி நலத்துறை, சமூக நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாட்டில் – இராணிப்பேட்டையில்

9 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாகன உற்பத்தி!

5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது!

இராணிப்பேட்டை, ஜூலை 25 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தலைமையிலான திராவிட மாடல் அரசின் பல்வேறு நடவடிக்கைகளால், தமிழ்நாட்டில் முதலீடு செய்ய முன்னணி நிறுவனங்கள் பலவும் ஆர்வம் காட்டி வருகின்றன.

இந்நிலையில், ராணிப்பேட்டை மாவட்டத்தில் டாடாமோட்டார்ஸ்நிறுவனத்தின் வாகன உற்பத்தி தொழிற்சாலைஅமையவுள்ளதாகதொழில்துறைஅதிகாரிகள்தகவல் வெளியிட்டுள்ளனர்.

அடுத்த 5 ஆண்டுகளில், 9 ஆயிரம் கோடி முதலீட் டில் 5 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் வாகன உற்பத்தி தொழிற்சாலை அமைக்கப்பட உள்ளது.

இந்ததொழிற்சாலையில் ஜாகுவார், லேண்ட் ரோவர் கார்களை தயாரிக்க டாடா நிறுவனம் திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் ரெட்டணை ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்து பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார் .உடன் விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி, மயிலம் சட்டமன்ற உறுப்பினர் சிவகுமார், கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன்ஜெய் நாராயணன், மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் உள்ளனர்.

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் திருப்பூர் மாநகராட்சியில் செயல்படுத்தப் பட்டு வரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், வடக்கு மாநகர கழக செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி.கிரியப்பனவர், மாவட்ட வருவாய் அலுவலர் ஜெய்பீம், திருப்பூர் சார் ஆட்சியர் சௌம்யா ஆனந்த், துணை மேயர் ரா.பாலசுப்பரமணியம், மண்டலத் தலைவர்கள் தம்பி கோவிந்தராஜ், வெ.உமாமகேஸ்வரி, கல்விக்குழு தலைவர் பெ.திவாகரன், சுகாதார குழு தலைவர் கவிதா நேதாஜி கண்ணன் உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் உள்ளனர்.